இன்றைய நாகரீகத்தின்
நவீன முன்னோடிகள்
ராக மாலிகா
ஆடை அகம்
4, நவீன சந்தை,
(உட்புறம்)
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சிறுவர்கள் முதல்
பெரியோர் வரை
நாட வேண்டிய
★ ஒரே ஸ்தாபனம் ★
ராக மாலிகா
ஆடை அகம்
4, நவீன சந்தை,
(உட்புறம்)
யாழ்ப்பாணம்.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 வைகாசி 02 திங்கட்கிழமை (16 - 5 - 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 169

# தடை செய்யப்படாத பொருள்களை எடுத்து வர படையினரின் அனுமதி பெறத் தேவையில்லை!

## யாழ். செயலக அதிகாரிகளின் முயற்சிக்குப் பலன் கிடைத்தது

யாழ்ப்பாணம், மே 16

வடபகுதிக்குக் கொண்டு வருவதற்கு அரசாங்கத்தினால் தடை செய்யப்படாத பாவனைப் பொருள்களை குடாநாட்டுக்கு எடுத்து வருவதற்கு, இனிமேல் பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழுவின் — படை அதிகாரிகளின் — அனுமதி பெறத் தேவையில்லை.

புனர்வாழ்வு அமைச்சு வழங்கும் "பெர்மிட்"டுடனேயே உணவு மற்றும் தடை செய்யப்படாத பொருள்களைக் கொண்டு வர முடியும்.

இது விடயத்தில் யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகரும், திட்டப் பணிப்பாளர் திரு. செ. பத்மநாதனும் எடுத்த முயற்சி பலனளித்தது.

யுத்தம் தொடங்கிய இரண்டு மாதங்களில், மொத்தம் 48 பாவனைப் பொருள்களை வடபகுதிக்கு எடுத்து வருவதற்கு அரசு தடைவிதித்திருந்தது.

பின்னர் சில பொருள்கள் மீதான தடையை நீக்கியது.

எனினும் ஆரம்பத்திலேயே தடைசெய்யப்படாத பொருள்களைக் குடாநாட்டுக்குக் கொண்டு வருவதற்கும் கூட்டுப்படைத் தலைமையகத்திடம் இருந்து அனுமதி பெற வேண்டும் என உத்தரவிடப்பட்டது.

கூட்டுப்படைத் தலைமையகம் கலைக்கப்பட்டு, பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழு நிறுவப்பட்ட பின்னர், தடை செய்யப்படாத பொருள்களை எடுத்து வருவதற்கு அதன் அனுமதி பெறவேண்டும்.

தடை செய்யப்படாத பொருள்களைக் கொண்டுவருவதற்கு பாதுகாப்புத்துறை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பிரேமாவின் எதிரிகளே இன்று அரசாங்கத்தில்

### சிறிசேன கூரே குற்றச்சாட்டு

கொழும்பு, மே 16

"பிரேமாவின் கொள்கைகளை முன்னெடுத்துச் செல்லப்போவதாகக் கூறும் இந்த அரசில் பிரேமதாஸாவுக்கு எதிரானவர்களே இன்று அங்கம் வகிக்கிறார்கள்."

— இவ்வாறு குற்றம் சுமத்தினார் அமைச்சர் சிறிசேன கூரே.

அவர் மேலும் சொன்னதாவது:

என்னை அரசியலில் இருந்து ஒதுக்குவதற்கு கடந்த இரு மாதங்களாக பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. விஷமத்தனமான பிரசாரங்களும் எனக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டன.

என்னை அரசியலில் இருந்து ஒதுக்க எண்ணியவர்கள் கட்சிச் செயலாளர் பதவியை நான் ராஜினாமாச் செய்தது தற்காலிக திருப்தி அடைந்துள்ளனர்.

புதிய கட்சி ஒன்றை நான் அமைக்கப் போவதாகக் கூறப்படுவதில் உண்மையில்லை.

நான் அரசியலில் தொடர்ந்து ஈடுபடுவது ஐ. தே. க. தலைமைப்பீடம் நடத்தும் முறையில் தான் தங்கியுள்ளது" — என்றும் அவர் கூறினார். (உ-எ)

## அமைச்சர்கள் எண்ணிக்கை: குறைப்பதற்கு அரசு முடிவு?

கொழும்பு, மே 16

அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களின் எண்ணிக்கையை 32 இல் இருந்து 25 ஆகக் குறைக்கும் திட்டம் ஒன்று ஐ. தே. க. தலைமைப் பீடத்திடம் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இத்திட்டத்தின்படி, மீண்டும் பிரதி அமைச்சர் பதவி அறிமுகப்படுத்தப்படும் என்றும் தெரிகிறது.

தற்போதுள்ள ராஜாங்க அமைச்சுகள், திட்ட அமைச்சுகள் ஆகியன அமைச்சரவை மாற்றத்தின் போது இல்லாதொழிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், திட்ட அமைச்சர்கள் என்று மொத்தமாக 87 அமைச்சர்கள் தற்போது உள்ளனர். (உ-எ)

## மட்டு. களுதாவளையில் வீடு வீடாகத் தேடுதல்

யாழ்ப்பாணம், மே 16

மட்டக்களப்பு களுதாவளைக் கிராமத்தை கடந்த 3 ஆம் திகதி அதிகாலை 6 மணிக்கு ஸ்ரீலங்கா பொலீஸ் அதிரடிப்படையினரும், பொலீஸாரும் இணைந்து சுற்றி வளைத்தனர்.

வீடு வீடாகச் சென்று படையினர் அனைத்து தமிழ் மக்களையும் குறித்த ஓர் இடத்துக்கு அழைத்துச் சென்று தீவிர விசாரணைக்கு உட்படுத்தினர்.

இதே போன்று மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி 8 ஆம் 9 ஆம் வட்டாரங்களை கடந்த நாலாம் திகதி பொலீஸ் அதிரடிப்படையினரும், பொலீஸாரும் இணைந்து சுற்றி வளைத்து அங்குள்ள சகல மக்களையும் அழைத்துச் சென்று பல எச்சரிக்கைகளுடன் விடுவித்தனர். (ஒ-3)

## அரசாங்க ஊழியர்களுக்கு மேலும் நிவாரணங்கள்

### வழங்க டி. பி. நடவடிக்கை

யாழ்ப்பாணம் மே 16

அரசாங்க ஊழியர்களுக்கும் அரசாங்கதுறை நிறுவன ஊழியர்களுக்கும் மேலும்பல நிவாரணங்களை வழங்க ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா நடவடிக்கை எடுத்துள்ளதாக அறிவிக்கப்பட்டது.

காணி வாங்க அல்லது வீடு கட்ட ஏற்கனவே வங்கிகளிடமிருந்து கடன் பெற்ற அரசுதுறை ஊழியர்கள் இக்கடனை திருப்பி செலுத்த வசதியாக 5 வருட சம்பளத்துக்குசமமான தொகையை கடனாக பெற்றுக்கொள்ளலாம்.

வங்கிகள் அறவிடும் வட்டியைவிட மிக குறைந்தவட்டியே 5 வருட சம்பள கடனுக்கு அறவிடப்படும்.

தற்போது கஷ்ட நிவாரண உதவியாக 6 மாதகாலச் சம்பளம்கடனாக வழங்கப்படுகின்றது. இனிமேல் 10 மாதகால சம்பளத்தை கஷ்டநிவாரண கடனாக வழங்க ஜனாதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளார். (த)

## ஸ்ரீலங்கா கடற்படை தாக்குதலை கண்டிக்கின்றார் ஜெயலலிதா!

### மத்திய அரசை தலையிடுமாறும் கோரிக்கை

சென்னை, மே 16

நாகை, காந்திமில்லர் மா. வட்டம் ஆற்காட்டு கிராமத்தைச் சேர்ந்த எட்டு மீனவர்கள் வெள்ளியன்று மீன்பிடிக்கச் சென்ற போது ஸ்ரீலங்கா கடற்படையினரால் துப்பாக்கிப் பிரயோகம் செய்து தாக்கப்பட்ட சம்பவத்தை தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா கண்டித்துள்ளார்.

இத்தகைய தாக்குதலை தடுத்து நிறுத்த மத்திய அரசு தலையிட்டு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் நேற்று சென்னையில் வெளியிட்ட கண்டன அறிக்கையில் கேட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா கடற்படையினர் கடந்த வெள்ளிக்கிழமை தாக்குதல் நடத்தியதில் ஒரு படகு தீப்பிடித்து எரிந்ததாகவும் —

மீனவர் ஒருவர் தீக்காயங்களுடன் தப்பி வந்து அரச மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் மற்றும் இரு மீனவர் காயமடைந்துள்ளனர் எனவும் மேலும் ஒருவரை ஸ்ரீலங்கா கடற்படையினர் பிடித்துச் சென்றுள்ளனர் எனவும் அந்த அறிக்கையில் அவர் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா கடற்படையினர் வசமுள்ள தமிழக மீனவர்களை விடுவிக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கும் படி செல்வி ஜெயலலிதா பிரதமர் நரசிம்மராவிடம் 'டெலெக்ஸ்' செய்தி மூலம் நேற்று கேட்டுள்ளார்.

காணாமற் போன மீனவர்களை கண்டுபிடிக்கும் பணியில் ஈடுபடுமாறு தமிழக அரசு அதிகாரிகளையும் அவர் பணித்துள்ளார். [ஒ-த-3-5]

முச்சந்தி முரளி



டி.பியாரின் நிவாரண அறிவிப்புகள் எல்லாம் எலெக்ஷன் ஸ்டண்ட் பாருங்கோ......!

## சிறுமி சித்திரவதை: பொலீஸ் உயரதிகாரி குற்றவாளி எனத் தீர்ப்பு

கொழும்பு, மே 16

16 வயதுச் சிறுமியை சித்திரவதை செய்த குற்றத்தைப் புரிந்ததன் மூலம் அச்சிறுமியின் அடிப்படை உரிமையை மீறியதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கில் திக்குவல்லை பொலீஸ் நிலைப் பொறுப்பதிகாரியை உயர் நீதிமன்றம் குற்றவாளியாகக் கண்டது.

அச்சிறுமிக்கு 5 ஆயிரம் ரூபா நட்டஈடாக வழங்கும்படியும் பொலீஸ் அதிகாரிக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

சம்பந்தப்பட்ட பொலீஸ் அதிகாரியின் வீட்டுக்கு அருகில் இச்சிறுமி வசித்து வந்தார் என்றும் —

அவ்வீட்டாருடன் மனஸ்தாபம் அடைந்திருந்த பொலீஸ் அதிகாரி ஒருநாள் அந்த வீட்டுக்குள் புகுந்து சிறுமியின் கன்னத்தில் அறைந்துவிட்டு பின்னர் அச்சிறுமியை அவரின் தலைமயிரைப் பிடித்து இழுத்து ஜீப்பில் ஏற்றிக் கொண்டு சென்றார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பின்னர் பொலீஸ் நிலையத்தில் வைத்து அச்சிறுமி பொலீஸார் சிலரால் சித்திரவதை செய்யப்பட்டார் என்றும் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

சிறுமியின் சாட்சியத்தை உயர் நீதிமன்றம் ஏற்றுக் கொண்டது (இ-எ-6)

## மே மாத ஓய்வூதிய வவுச்சர்கள் வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம், மே 16

"றுகுணு' கப்பலில் எடுத்து வரப்பட்ட மே மாத பென்சன் வவுச்சர்கள் மற்றும் ஒரு தொகுதி தேசிய அடையாள அட்டைகள் என்பன கப்பலில் இருந்து இறக்கப்பட்டு நேற்று யாழ். அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டன. (உ-5)

## தமிழ் இளைஞர் சுட்டுக் கொலை

யாழ்ப்பாணம், மே 16

மட்டக்களப்பு, உன்னிச்சைப் பகுதி இராணுவத்தினர் 6 ஆம் கட்டையைச் சேர்ந்த அமிர்தன் விமலநாதன் என்ற தமிழ்மகனை கடந்த 10 ஆம் திகதி கைது செய்து சுட்டுக் கொலை செய்தனர் ... இளைஞருக்கு 24 வயதாகும். (ஒ-3)

## சாம்பிராணி புகை அடித்து பிசாசை வெளியேற்றலாம் ஆனால் நாம் வெளியேறோம்!

### ஐ.தே.க. தேசிய பட்டியல் எம்.பி. கூற்று

கொழும்பு, மே 16

சாம்பிராணி புகை அடித்து பிசாசை வெளியேற்றலாம். ஆனால் அப்படிச் செய்தும் எம்மை வெளியேற்ற முடியாது. நாம் எம்.பி. பதவியை ராஜினாமாச் செய்யப்போவதில்லை.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப்பட்டியல் எம். பி. ஒருவர் இவ்வாறு கூறியிருந்தார்.

கடந்த வார "சண்டே ஐலண்ட்" இத்தகவலை வெளியிட்டது.

காமினி திஸநாயக்காவை எம். பியாக்கும் முயற்சியாக ஐ தே கவின் தேசியப்பட்டியல் எம்.பிக்களை இராஜினாமாச் செய்யுமாறு ஐ தே.க. தலைமைப்பீடம் நிர்ப்பந்தித்து வருவது தெரிந்ததே. (உ-எ)

## ப. நோ. கூ. சங்கங்களுக்கு 'வாதுவ'வில் பொருள்கள்!

### 2 ஆயிரம் தொன் வந்து சேரும்

யாழ்ப்பாணம், மே 16

யாழ் மாவட்டத்தில் உள்ள ப. நோ. கூ. சங்கங்களுக்கு 'வாதுவ' கப்பல் மூலம் 2 ஆயிரம் மெற்றிக் தொன் உணவுப் பொருள்கள் எடுத்துவர புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு அனுமதி வழங்கியது.

யாழ். மாவட்டத்துக்கு எடுத்து வருவதற்கு — ஒரு கப்பலுக்கு தேவையான அளவு — பொருள்கள் கொழும்பில் சேராததால் கொழும்பு— பருத்தித்துறை இடையேயான "வாதுவ" கப்பலின் சேவை இடைநிறுத்தப்பட்டிருந்தது தெரிந்ததே.

கொழும்பு சென்றிருந்த யாழ். செயலக திட்டப்பணிப்பாளர் திரு. செ. பத்மநாதன் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுக்களை அடுத்து 'வாதுவ' கப்பலில் ப. நோ. கூ. சங்கங்கள் 2 ஆயிரம் மெற்றிக் தொன் உணவுப் பொருள்களை எடுத்துச் செல்ல அனுமதி வழங்கியது.

இக்கப்பலில் உணவுப் பொருள்களை எடுத்து வர விரும்பும் ப. நோ. கூ. சங்கங்களை தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு திட்டப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

## உன்னிச்சையிலிருந்து தமிழர் வெளியேற்றம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் உன்னிச்சை 8ஆம் கிராமத்தில் இருந்து இடம்பெயர்ந்து பின் மீளக்குடியேற்றப்பட்ட 75 க்கும் மேற்பட்ட — தமிழ் குடும்பங்களை உடனடியாக அங்கிருந்து வெளியேறுமாறு ஸ்ரீலங்கா இராணுவத்தினர் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளனர்.

உன்னிச்சை இராணுவத்தினரின் இந்த அறிவிப்பைத் தொடர்ந்து அங்குள்ள தமிழ் மக்கள் அவசரமாக வேறு இடங்களுக்கு வெளியேறிக் கொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது. (உ-8)

## ரூ. 1 கோடி நஷ்டஈடு கோரி அடிப்படை உரிமைமீறல்மனு

### நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றது

கொழும்பு, மே 16

ஒரு கோடி ரூபா நட்டஈடு கோரி பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் டி. எம். ஜயரத்னாவும் தென்மாகாண சபை உறுப்பினர் டெனிசன் எதிரிசூரியாவும் கூட்டாகத் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவை விசாரணைக்கு உயர்நீதிமன்றம் ஏற்றுக் கொண்டது.

எதிர்வரும் ஆகஸ்ட் 22 ஆம் திகதி இம்மனு விசாரணை செய்யப்படும் என்று பிரதம நீதியரசர் ஜி பி. எஸ். சில்வா தலைமையிலான நீதியரசர்கள் குழு அறிவித்துள்ளது.

அம்பாந்தோட்டை உதவிப் பொலீஸ் அதிபர் சி. ஏ. பெர்னாண்டோ இன்னொரு உதவி பொலீஸ் அதிபர் ரவி விஜயகுணவர்த்தன, ரூவெல பொலீஸ் நிலையப்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## பிரேமா கொலைச் சம்பவம்: ஆணைக்குழு நியமிக்க அரசாங்கம் இணக்கம்?

கொழும்பு, மே 16

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸா கொலையுண்டமை குறித்து சுதந்திரமான ஆணைக்குழு ஒன்றை நியமித்து விசாரிக்க வேண்டும் என அவரது குடும்பத்தவர்கள் விடுத்திருக்கும் கோரிக்கையை அரசு அவர்களுக்கு மிகச் சாதகமான முறையில் பரிசீலிக்கிறது.

இவ்வாறு ஆளும் ஐ. தே. கவின் பொதுச் செயலாளர் காமினி விஜேசேகரா தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவின் குடும்பத்தவர்களை கடந்த செவ்வாயன்று மரியாதையின் நிமித்தம் சந்தித்தேன்.

அப்போது அவர்கள் பல கோரிக்கைகளை முன்வைத்தனர்.

தமது குடும்பத் தலைவரின் மரணம் குறித்து விசாரிக்க சுதந்திர ஆணைக்குழு ஒன்று நியமிக்கவேண்டும் என்பது அவர்களது கோரிக்கைகளில் ஒன்று.

இக்கோரிக்கையை ஜனாதிபதிக்கு எழுத்து மூலம் தெரிவிக்கும்படி நான் கூறினேன்.

அதனை அடுத்து அவர்கள் ஜனாதிபதிக்கு எழுத்து மூலம் அதனை அறிவித்தனர் ... ஜனாதிபதி பதில் ...

(4 ஆம் பக்கம் பார்க்க)

## லலித் கொலை குறித்தும் விசாரிக்க ஆணைக்குழு?

கொழும்பு, மே 16

முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத் முதலி கொலை குறித்து விசாரிக்க ஆணைக்குழு ஒன்றை நியமிக்கும்படி அரசிடம் லலித்தின் துணைவியார் சிறிமாலி கோரிக்கை விடுத்திருக்கிறார்.

ஐ. தே. க. பொதுச் செயலாளர் காமினி விஜேசேகரா ... எம். பி. பி. லிக்கு அளித்த பேட்டியில் இந்த தகவலையும் வெளியிட்டார்.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸா கொலை குறித்து விசாரிக்க ஆணைக்குழு நியமிப்பது பற்றி அவரிடம் கேட்கப்பட்டது.

கேள்வி:- ஆணைக்குழுவை நியமித்து அதன் மூலம் பிரேமதாஸா குடும்பத்தவர்களை மகிழ்வித்து, அதற்கு கைமாறாக ஐ. தே. கவுக்கு அவர்களின் ஆதரவைப் பெற்றுக் கொள்ளவே முயற்சிக்கப் படுவதாகக் கூறப்படுகிறதே?

விஜேசேகரா:- அவர்களின் கோரிக்கையை ஏற்பதில் ஏதாவது ஆட்சேபனை இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஆனால் நாங்கள் இதுபற்றித் தீர்மானிக்க முன் கட்சிச் செயலாளர் என்ற வகையில் எதுவும் கூறமுடியாது.

ஏனென்றால் இதேபோன்ற ஒரு கோரிக்கையை முன்னாள் அமைச்சர் லலித்தின் துணைவியாரும் கேட்டுள்ளார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

மட்டுவில் திருக்கணித நிலை யத்திற்கு அருகாமையில் 5 பரப்புடன் அமைந்துள்ள கல் வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ஸ்ரீ விஷ்ணு மூர்வர் கோட்டடி சாவகச்சேரி. (30891)

## வெளிவந்துவிட்டது!

த. சத்தியீஸ்வரனின் அசேதன இரசாயனம் பகுதி - 2 S. தொகுப்பு மூலகங்கள் ஆவர்த்தனப் போக்குகள். ஸ்ரீ லங்கா புத்தகசாலை, 234, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி-8155)

இரா. சந்திரசேகரனின் விந்தைகள் செய்த விஞ்ஞானிகள் 12 விஞ்ஞானிகளைப் பற்றிய பல விவரம் அடங்கிய நூல், நான்காவது திருத்திய கணனிப் பதிப்பு, ஸ்ரீ லங்கா புத்தகசாலை, 234, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி-8154)

## தவறிவிட்டது

12-5-94 அன்று பாஷையூர் முதலாம் குறுக்கு வீதியில் இருந்து சட்டநாதர்வீதி, வீதி அபிவிருத்தித் திணைக்கள அலுவலகத்துக்கும் இடையில் பெண்கள் அணியும் மூக்குக் கண்ணாடி உறையுடன் தவறி விட்டது. கண்டெடுத்தவர் 24, முதலாம் குறுக்கு வீதி, பாஷையூரில் ஒப்படைக்கவும். (30904)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

## பட்டப்பின் படிப்பிற்குப் பதிவு செய்தல் 1994

(கலாநிதி, முதுமெய்யியல்மாணி)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 1993/94 ஆம் கல்வியாண்டில் பின்வரும் பாட நெறிகளுக்கு, பட்டப்பின் படிப்பிற்கான தகுதி பெற்றவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பொருளியல்,
கல்வியியல்,
புவியியல்,
இந்துநாகரிகம்,
அரசியல்,
கிறிஸ்தவ நாகரிகம்,
வரலாறு, வர்த்தகம்,
தமிழ், மெய்யியல்,
சமஸ்கிருதம்,
மொழியியல்,
நுண்கலை நாடகமும் அரங்கியலும்,
சித்தமருத்துவம்.

இக்கற்கை நெறி தொடர்பான விண்ணப்பங்களை நேரில் பெற விரும்புவோர், நிதிக்கிளையில் ரூபா 20/- செலுத்திப் பற்றுச் சீட்டினைக் கல்விக் கிளை, சிரேஷ்ட உதவிப் பதிவாளரிடம் சமர்ப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

தபால் மூலம் பெற விரும்புவோர் நிதியாளர், யாழ். பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு எழுதப்பட்ட ரூபா 20/- இற்கான காசுக்கட்டளை அல்லது தபாற்கட்டளையுடன் ரூபா 8/- பெறுமதியுள்ள முத்திரை ஒட்டி சுய விலாசமிடப்பட்ட தபால் உறையினையும் அனுப்புதல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 1994 - 06 - 27 ஆம் திகதிக்கு முன்பாக சிரேஷ்ட உதவிப் பதிவாளர், கல்விக் கிளை, யாழ். பல்கலைக்கழகம் என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். 1994 - 06 - 27 ஆம் திகதிக்குப் பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

பதிவாளர்.
யாழ் பல்கலைக்கழகம்.
[சி-8156]

## உழுந்து உடைத்தல்

வியாபாரிகளே உங்களிடம் உள்ள உழுந்தை வந்து கையால் உடைத்து பருப்பாக்கி கொடுக்கப்படும். ஒரு கிலோவுக்கு கூலி ஒரு ரூபாய் மட்டும். விபரங்களுக்கு: பா. சதீஸ், 80, மார்க்கட் பாய்க் கடை, யாழ்ப்பாணம். (7380)

## உதவிசெயலர்களை டி. பி. நியமிப்பார்

ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய உதவிச் செயலாளர்களை ஜனாதிபதி விஜேதுங்கா நியமிப்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பதவி விலகிய ஆறு உதவிச் செயலாளர்களில் இருந்தும் ஒரிருவரை ஜனாதிபதி மீண்டும் அதே பதவிக்கு நியமிக்கக் கூடும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஞ-எ)

விடுதலைப் புலிகள்
கலை, பண்பாட்டுக் கழகம்
நடத்தும்
கரும்புலிகள் நாளையொட்டிய

## அரங்க விழாவும், கிராமிய ஆட்ட கலை விழாவும்

05 - 07 - 1994 அன்று நடைபெறவிருக்கும் கரும்புலிகள் நாளையொட்டி விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் மாவட்டங்கள் மட்டத்தில் நடத்தவிருக்கும் இப்போட்டிகளில் கலந்து கொள்ளும் அமைப்புக்கள், தனிநபர்களுக்கான விதிமுறைகளை கீழே வகைப்படுத்தித் தருகின்றோம்.

சகல போட்டிகளுக்குமான விண்ணப்பங்களும், கோட்ட மட்டத்திலான விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழக செயலகங்களில் 02 - 06 - 1994 க்கு முன்னதாக நேரில் கையளிக்கப்பட வேண்டும்.

### அரங்க வகைகளும் போட்டி விதிமுறைகளும்

1. பாரம்பரிய அரங்க முறைமைகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் நாடகங்கள். உதாரணமாக கூத்து, இசைநாடகம், வரலாற்று நாடகம், இலக்கிய நாடக வடிவங்களைக் கொண்டவையாக இவை அமையும்.
2. நவீன அரங்க முறைமைகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் நாடகங்கள். உதாரணமாக இயல்புநெறிவாதம், யதார்த்தவாதம், மோடிமை, குறியீட்டுத்தன்மை கொண்டவையாக இவை அமையும்.

### பொது அறிவுறுத்தல்கள்

1. கலை வடிவங்களின் கருப்பொருள் சமகாலப் பிரச்சினைகள், நிகழ்வுகளை யொட்டியதாகவும், கலை யம்சம் நிறைந்ததாகவும் எமது விடுதலைப் போரை முன்னெடுத்துச் செல்வதாகவும் அமைதல் வரவேற்கத்தக்கது.
2. நாடகம் 45 நிமிடங்கள் கொண்டதாக இருத்தல் வேண்டும். (ஐந்து நிமிட விலகல் மட்டும் அனுமதிக்கப்படும்.)
3. (அ) சிறந்த நடிகர்
   (ஆ) சிறந்த நடிகை
   (இ) சிறந்த நெறியாள்கை
   (ஈ) சிறந்த எழுத்துரு
   (உ) சிறந்த இசையமைப்பு
   (ஊ) சிறந்த வேடப்புனைவு
   என்பவற்றிற்குச் சிறப்புப் பரிசுகள் வழங்கப்படும்.

### சிறுவர் அரங்கு

சிறுவர்களின் வயதிற்கும் உளவளர்ச்சிக்கும் அமைவாகக் கருப்பொருள் அமைய வேண்டும். அத்துடன் நாடக ஆளிக்கையில் சிறுவர்களே பங்குகொள்ள வேண்டும். பின்னணி வாத்தியக் கருவிகளை மட்டும் பெரியோர் கையாளலாம்.

### பொது அறிவுறுத்தல்கள்

(அ) நாடக ஆளிக்கையில் ஆறு தொடக்கம் பன்னிரண்டு (6—12) வயது வரையுள்ள சிறுவர்கள் கீழ்ப்பிரிவிலும், 13 தொடக்கம் 17 வயது வரை உள்ளவர்கள் மேற்பிரிவிலும் அடங்குவர்,
(ஆ) கீழ்ப்பிரிவு நாடகம் 20 நிமிடங்கள் கொண்டதாக அமைதல் வேண்டும்.
2 நிமிட விலகல் மட்டும் அனுமதிக்கப்படும்)
(இ) மேற்பிரிவின் நாடகம் 30 நிமிடங்கள் கொண்டதாக அமைத்தல் வேண்டும்.
(5 நிமிட விலகல் மட்டும் அனுமதிக்கப்படும்)
(ஈ) சிறுவர் நாடகங்களை பாடசாலைகளோ, தனிநபர்களோ, அமைப்புக்களோ தயாரிக்கலாம்.
(உ) நாடகங்களில் பங்கேற்கும் சிறுவர்களின் வயதெல்லையை பாடசாலைகளாயின் பாடசாலை அதிபர்களும், தனிநபர் தயாரிப்பு அல்லது அமைப்புக்களின் தயாரிப்புக்களாயின் அப்பகுதி கிராம சேவகரும் உறுதிப்படுத்த வேண்டும்.
(ஊ) நாடக ஆளிக்கையில் பங்குகொள்ளும் சிறுவர்களின் எண்ணிக்கை 15க்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.

### கிராமிய ஆட்டக் கலைப் போட்டிகள்

1. கோலாட்டம்
2. கரகம்
3. ஆட்டக்காவடி
4. கும்மி

### பொது அறிவுறுத்தல்கள்

(அ) இவை ஒவ்வொன்றும் 10 நிமிடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

✲ குறிப்பு

(அ) ஒவ்வொரு போட்டியிலும் தெரிவு செய்யப்படும் முதல் மூன்று தெரிவுகளுக்கும் பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படும்.
(ஆ) நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது,
(இ) தயாரிப்புக்களுக்கான செலவுகளையும், போக்குவரத்துக்கான செலவுகளையும் தயாரிப்பவர்களே பொறுப்பேற்க வேண்டும். மாவட்ட மட்டத்திலான போட்டிகளுக்குத் தெரிவு செய்யப்படும் தயாரிப்புகளுக்கான போக்குவரத்து வசதிகளை விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் பொறுப்பேற்கும்.
(ஈ) மேலதிக விபரங்களைப் பெற விரும்புவோர் அந்தந்த கோட்டக் கலை, பண்பாட்டுக் கழகச் செயலகங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

விடுதலைப் புலிகள்
கலை, பண்பாட்டுக் கழகம்,
நடுவப் பணியகம்,
தமிழீழம்,

[சி-8131]

## பயிற்சி - உதவித் தாதியர் தேவை

நவீன மருத்துவமனை
(MODERN HOSPITAL)
767, மானிப்பாய் வீதி,
ஆறுகால்மடத்தடி- யாழ்ப்பாணம்.

மேற்படி மருத்துவமனைக்கு மேற்படி பதவிக்கு பெண்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமைகள்:
1. G. C. E. (O/L) ஆங்கில அறிவு அவசியம்.
2. நல்லொழுக்கம் வயது 18 — 24

விண்ணப்பம்:
பணிப்பாளர்,
நவீன மருத்துவமனை,
மானிப்பாய் வீதி,
ஆறுகால்மடத்தடி, யாழ்ப்பாணம்.

நேரடியாகவோ, தபாலிலோ 30 - 05 - 94 இற்கு முன்.

குறிப்பு:
பயிற்சிக் காலத்தில் வேதனம் வழங்கப்படும்.

- பணிப்பாளர்.

[30909]

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 22 — 01 — 1972
உதிர்வு: 16 — 05 — 1988

### செல்வி ந. அருந்தவமலர்

(வவி)
(சரவணை கிழக்கு)

அன்பின் பிறப்பிடமாய்
அருந்தவமலர் - வவி என்று
ஆசையுடன் நாம் அழைத்து
ஆண்டுகள் ஆறு சென்றாலும்
ஆறுதல் சொல்ல யாருமில்லை
வானத்து நிலவென எழில் படைத்தாய்
வவி என்று நீ பெயரெடுத்தாய்
ஏனிந்த சோகத்தை எமக்களித்தாய்
இனியவளே உன் நினைவு
எம் மனதை விட்டு நீங்காதம்மா.

உமது பிரிவால் தயருறும்:
பப்பா, அம்மா, அண்ணா (பேபி),
சகோதரிகள், தம்பி (றஞ்சித்).

26, சனசபை வீதி,
மானிப்பாய். (30825)

இப்போட்டிகளில் பங்குபற்றும் போட்டியாளர்கள் கீழ்வரும் மாதிரிப் படிவத்தை பூர்த்தி செய்து விண்ணப்பிக்கவும்.

விடுதலைப் புலிகள்
கலை, பண்பாட்டுக் கழகம்
நடத்தும்
கரும்புலிகள் நாளையொட்டிய

## அரங்க விழாவும் கிராமிய ஆட்டக் கலை விழாவும்

## விண்ணப்பப் படிவம்

1) பங்குபற்றும் அமைப்பின் பெயர்:
..............................................................
..............................................................

2) முகவரி:
..............................................................
..............................................................
..............................................................
..............................................................

3) கோட்டத்தின் பெயர்:
..............................................................
..............................................................

4) நாடகத்தின் தன்மை:
அ: ..............................................................
ஆ: ..............................................................
இ: ..............................................................
ஈ: ..............................................................

5) கிராமிய ஆட்டக்கலை:
அ: ..............................................................
ஆ: ..............................................................
இ: ..............................................................
ஈ: ..............................................................

இப்போட்டிகளின் விதிமுறைகளுக்கு கட்டுப்பட்டு மேற்படி போட்டிகளில் கலந்து கொள்ளுகின்றேன் என்பதை அறியத்தருகின்றேன்,

..............................
விண்ணப்பதாரரின் கையொப்பம்

(சி-8157)

## எமது மண்ணில் நற்பெயர் பெற்றது




றோயல் றோஸ்
ரால்கம்பவுடர்

- நறுமணமிக்கது
- சுகாதாரமிக்கது
- புத்துணர்ச்சியானது
- அனைவராலும் விரும்பதக்கது
- விலை மலிவானது

தீபா றோஸ்
ரால்கம்பவுடர்




அழகிய கொள்கலன்களில் அற்புத தயாரிப்பாக விற்பனையிலுள்ளது

றோயல் இன்டஸ்றீஸ்
பொன்னையா வேள,
வண்ணார்பண்ணை வடமேற்கு,
ஆனைக்கோட்டை

## விற்பனையாகிறது!

சுற்றாடற் கல்வி - ஆண்டு 2
(செயல் நூல்)
புதிய பாடத் திட்டத்திற்குரியது
ஆக்கம்: த. துரைசிங்கம்

(30900)

## ஓராண்டு நினைவஞ்சலி



### சேதர்ப்பிள்ளை கனகராசா

(தீபன் வியாபார நிலைய உரிமையாளர்)

மண்ணுலகில்: 09 — 03 — 1949
விண்ணுலகில்: 27 — 05 — 1993


27-05-1993 காலன் கையுண்ட சேதர்ப்பிள்ளை கனகராசா தீபன் ஸ்ரோஸ் உரிமையாளரின் ஓராண்டு நினைவு தினம் இன்று (16-05-1994) திங்கள் ஆகும்.
அன்னார் நினைவை யொட்டிய இரங்கல்

கண்ணீர் ஆறாக கவலை நெஞ்சை
துன்பக் கேணியாய் இன்னலோடேங்க
அன்பான கனகராசா ஆண்டொன்றானாலும்
துன்பம் தொடர துயரக் கோடகலா
என்னே கவலை என்னே துன்பம்
என்றோ காணும் எங்கள் தெய்வமே!

பிரிவால் நினைந்துருகும்:
தாய், மனைவி, மக்கள்,
உற்றார், உறவினர்.

கைதடி தெற்கு,
கைதடி. [30908]

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம்: 10 — 08 — 1910
மறைவு: 17 — 04 — 1994

### திருமதி வல்லிபுரம் செல்லாச்சி

எம்மைப் பெற்றெடுத்துப் பெருமைக்களாக்கிய எமது அன்னையே! இறைவனடி எய்திவிட்ட உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

எமது அன்னையின் இறுதிச் சடங்குகளில் கலந்து கொண்டும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும் எம்மை ஆற்றுவித்த எம் அன்பர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

17-05-1994இல் அன்னாரது இல்லத்தில் இடம் பெறும் வீட்டுக் கிருத்திய நிகழ்விலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

மக்கள், மருமக்கள்.

தாமரைக்குளம்,
துன்னாலை. [சி-8201]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
192/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

## தனி நாட்டின் அவசியம்

வெளிமாவட்டங்களைச் சேர்ந்த தமிழர்கள் நீர்கொழும்பில் தங்க முடியாது என்று தடை விதிக்கப்பட்டிருக்கிறது. பாதுகாப்புக் காரணங்களுக்காக இந்தத் தடை விதிக்கப்பட்டிருப்பதாக பொலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எந்த ஒரு பொலீஸ் பிரிவிலும், எவராவது புதிதாகச் சென்று தங்குவதானால், சம்பந்தப்பட்ட பொலீஸ் நிலையத்தில் பதிவு செய்ய வேண்டும் என்பது பாதுகாப்பு அமைச்சின் உத்தரவு.

இந்த உத்தரவுக்கு இணங்க, அரசாங்க விதிகளுக்கு மதிப்பளித்து, நீர்கொழும்புப் பகுதியில் புதிதாகத் தங்கச் செல்லும் தமிழர்கள், பொலீஸ் நிலையம் சென்று பதிவு செய்யக்கோரினால் அதற்கு மறுப்புத் தெரிவிக்கப்படுகிறது. நீர்கொழும்பில் தங்க முடியாது என்று அவர்கள் திருப்பி அனுப்பப்படுகிறார்கள்.

அந்தப் பகுதிப் பொலீஸ் அதிபரின் உத்தரவுப் பிரகாரமே, நீர்கொழும்பில் வெளியூர் தமிழர்கள் புதிதாகத் தங்குவதற்கு தடை விதிக்கப்படுகிறது — பொலீஸ் நிலையத்தில் பதிவதற்கு மறுப்புத் தெரிவிக்கப்படுகிறது!

அண்மைக் காலமாக நீர்கொழும்புக்கு வரும் தமிழர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இதனால் பாதுகாப்புக் காரணத்துக்காக புதிதாக வரும் தமிழரைப் பதிவுசெய்வதில்லை என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இதுவே நீர்கொழும்புப் பிரதேச பொலீஸ் அதிபரின் நிலைப்பாடு — அரசாங்கத்தின் நிலைப்பாடு.

நீர்கொழும்புக்குப் புதிதாகச் செல்லும் தமிழர்கள் அங்கு நிரந்தரமாகக் குடியேறுவதற்குப் போவதில்லை. நீண்டகாலத்துக்குக் குடியிருக்கும் நோக்கத்துடனும் செல்வதில்லை.

அங்கு புதிதாகச் செல்வோரில் பெரும்பாலானவர்கள், தங்கள் உறவினர்களுடன் சில நாட்களுக்குத் தங்குவதற்கும், கொழும்பில் அவசர அலுவல்களைக் கவனிக்க வேண்டிய சில நாட்களுக்குத் தற்காலிகமாகத் தங்குவதற்குமே போகிறார்கள்.

கொழும்பு நகரப் பகுதியில் வீட்டு வாடகை வானத்தை முட்டை எட்டி விட்டதால் சற்றுக் குறைந்த வாடகையுடன் தங்குவதற்காக கொழும்பில் தொழில் புரியும் தமிழர்களும் அங்கு செல்கிறார்கள்.

இவர்களை நீர்கொழும்புக்கு வரவேண்டாம் என்று தடை விதிப்பது, அவர்களின் வாழ்க்கைத் தேவைகளை நிறைவேற்றுவதற்காக ஓரிடத்தில் தங்கும் மனித அடிப்படை உரிமையைப் பறிப்பதாகும். தமிழர்கள் என்பதால் விதிக்கப்படும் விசேட தடையாகும். இனரீதியான பாகுபாட்டைப் பிரதிபலிப்பதாகும்.

பாதுகாப்புக் காரணத்தைக் காட்டி, தமிழர்கள் நீர்கொழும்பில் தங்குவதற்குத் தடை விதிக்கும் அரசு கொழும்பிலும் அவ்வாறே செய்யக் கூடும். அரசாங்கமும், அதிகாரிகளும் நினைத்த நினைத்த மாத்திரத்தே தமிழர்கள் தெற்கில் எந்தப் பகுதிக்கும் போகக் கூடாது என்றும் தடை செய்யப்படலாம்.

இத்தகைய தடை தமிழர்களைச் சந்தேகப் பிராணிகளாகவும், இரண்டாம் தரம் பிரஜைகளாகவும் அரசாங்கம் கொள்வதையே எடுத்துக் காட்டுகிறது.

நாட்டின் எல்லாப் பிரஜைகளும் சமமானவர்கள், எல்லோருக்கும் சம உரிமை உண்டு என்று ஜனாதிபதி விஜேதுங்கா தேர்தலை முன்விட்டு ஆரம்பித்து இசைக்கத் தொடங்கியிருக்கும் 'பாட்டு'க்கு முற்றிலும் நேர் முரணானதாகும்.

இந்த நிலைப்பாடு தமிழர்கள் வடக்கு-கிழக்கில் மட்டுமே வாழ முடியும் என்ற ஒரு நிலையை உருவாக்கும். அதுவே தமிழரின் தாயகம் என்பதனை ஆழமாக உணர்த்துகிறது. தமிழர்கள் முதலாம் தரப் பிரஜைகளாக வாழ வேண்டின் தங்கள் தாயகத்தை தனி நாடாக்க வேண்டும் என்ற அவசியத்தை உறுதிப்படுத்துகிறது.

# சிங்களவரின் இனவாத போக்கு மாறினாலே பிரச்சினைக்கு தீர்வு

## அமைச்சர் தயாரத்தினா சாட்டை

கொழும்பு, மே 16

இந்த நாட்டின் பெரும்பான்மை இனத்தவரின் இனவாதம் மாறாத வரை இனப் பிரச்சினைக்கு தீர்வே கிடைக்காது.

புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் பி. தயாரத்தினா முன்கண்டவாறு தெரிவித்தார்;

இரத்தினபுரி மணிக்கூண்டுக்கு அருகே நடந்த பொதுக் கூட்டம் ஒன்றில் அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது:

வடக்கு-கிழக்கு யுத்தத்தின் கோரத்தன்மையை கிழக்கு மாகாண மக்களை விட வேறு எவருமே அறிந்திருக்கமுடியாது. யுத்தத்தின் பயங்கரங்களை அனுபவிப்பவர்களும் அனுபவித்துக் கொண்டிருப்பவர்களும் கிழக்கு மாகாணத்தவர்கள் தான்.

இந்த யுத்தத்தால் வடக்கு-கிழக்கு மாகாண மக்கள் அனுபவித்து வரும் வேதனையை, துயரத்தை தென் மாகாண மக்கள் அறிந்திருக்க முடியாது.

வடக்கு-கிழக்கு மாகாண மக்கள் பற்றிய கரிசனை தென் மாகாண மக்களுக்குக் கிடையாது.

இப்பிரச்சினை விரைவில் தீரவேண்டும் என மனப்பூர்வமாக விரும்புபவர்கள் வடக்கு-கிழக்கு மக்கள் தான். அன்று தமிழ், சிங்கள மொழிகளுக்கு சம அந்தஸ்து வழங்கப்பட்டிருந்தால் இந்த யுத்தமே ஏற்பட்டிருக்காது.

இந்த நாட்டின் பெரும்பான்மை, சிறுபான்மை இனங்களை மோதவிட்டு வேடிக்கை பார்ப்பதற்காக அன்று ஆங்கிலேயர் யாழ்ப்பாணம் போன்ற சிறுபான்மை மக்கள் வாழ்ந்த பகுதிகளில் பெரும் எண்ணிக்கையில் கல்லூரிகளை நிறுவினர். இதனால் தமிழர் கல்வியில் முன்னேறினார்கள். பல்கலைக்கழகங்களுக்கும் பெரும் எண்ணிக்கையில் தமிழர் அனுமதிக்கப்பட்டனர். அரச தொழிலும் அதிக அளவில் தமிழருக்கே கிடைத்தன. இது தமிழர்களின் தவறல்ல; சிங்களவர்களின் தவறும் அல்ல. ஆங்கிலேயர்களின் தவறாகும்.

இந்த நிலைக்கு எமது சிங்களத் தலைவர்கள் என்ன செய்தனர்? தமிழர் மீது வெறுப்பு ஏற்படும் விதத்தில் சிங்களவர் மத்தியில் இனத் துவேஷத்தை விதைத்தனர். இதனால் இரு இனங்களுக்கும் இடையில் குரோதம் வளர்க்கப்பட்டது; 1956, 1958, 1977, 1983ஆம் ஆண்டுகளில் வகுப்புக் கலவரங்கள் ஏற்பட்டன. 1983 கலவரத்தின் போது எமது பொறுப்பற்ற தன்மையால் இந்தியா தலையிட்டது.

இந்த நாட்டில் இனப்பிரச்சினை தீர பெரும்பான்மை இனம் அரசுடன் ஒத்துழைக்க வேண்டும்; இல்லையேல் இப்பிரச்சினை நீண்டுகொண்டே செல்லும். இனியாவது சிங்களவர் தம் உள்ளங்களில் இருந்து இனவாதத்தை ஒதுக்க வேண்டும்.

இந்த நாட்டில் வறுமை நிவாரண முத்திரை பெறுபவர்களுக்காக அரசு 400 கோடி ரூபா மட்டும் தான் செலவிடுகின்றது. ஆனால் வடக்கு-கிழக்கு யுத்தத்துக்கோ ஆண்டு தோறும் 2 ஆயிரம் கோடி ரூபாவை செலவிடுகிறது —

என்றும் அமைச்சர் திரு தயாரத்தினா தெரிவித்தார். (த-எ)

## தேயிலை ஏல விற்பனையில் பெரும் விலை வீழ்ச்சி!

கொழும்பு, மே 16

கொழும்பு தேயிலை ஏல விற்பனையில் பொதுவாக அனைத்து ரகங்களுக்குமான தேயிலை விலைகளும் படிப்படியாக சரிந்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வார தேயிலை ஏல விற்பனையில் பி. ஓ. பி. தேயிலை 1 கிலோவின் விலை 47 ரூபாவுக்கு வீழ்ச்சி அடைந்துள்ளது. பி. ஓ. பி. தேயிலை விற்பனையில் பொதுவாக 5 ரூபா முதல் 15 ரூபா வரை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

இதற்கு முக்கிய காரணம் தேயிலை உற்பத்தியில் தரம் குறைந்திருப்பதே என்று கூறப்பட்டது. எனினும் தேயிலையை அதிகமாக கொள்வனவு செய்யும் நாடுகள் ஏலத்தில் பங்குபற்றாமையே இதற்குக் காரணம் என்று ஒரு சாரார் தெரிவித்துள்ளனர். (த)

## 200க்கு அதிகமான தனியார் தேயிலை தொழிற்சாலைகள் விரைவில் மூடப்படும்!

அடுத்த இரண்டு, மூன்று வாரங்களில் 200க்கு அதிகமான தனியார் தேயிலைத் தொழிற்சாலைகள் மூடப்படும் என்று அவற்றின் உரிமையாளர்கள் எச்சரித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அரசு உடனடியாகத் தலையிட்டு தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றாத பட்சத்தில், தொழிற்சாலைகளை மூடுவதைத் தவிர வேறு வழியே கிடையாது என்றும் தனியார் தேயிலை உற்பத்தித் தொழிற்சாலை உரிமையாளர் சங்கத்தின் பேச்சாளர் தெரிவித்தார். (த-எ)

## ஐ. தே. க செயற்குழு உறுப்பினரை கொழும்பில் தங்கியிருக்க பணிப்பு

கொழும்பு, மே 16

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் மறு அறிவித்தல் வரை கொழும்பிலேயே தங்கியிருக்கும்படி ஐ.தே.க. தலைமைப்பீடம் அறிவித்துள்ளது.

இந்த அறிவிப்பை அடுத்து பிறமாவட்டங்களில் வசித்து வரும் ஐ. தே. க. செயற்குழு உறுப்பினர்கள் கொழும்புக்கு விரைந்தனர்.

அரசியல் நிலைமைகளையும்— கட்சி விவகாரங்களையும் உடனுக்குடன் ஆராய்ந்து முடிவு எடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருப்பதாலேயே கட்சித் தலைமைப் பீடம் இந்த அழைப்பை விடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மே தினமன்று ஐ. தே. க. பொதுச்செயலாளர் பதவியை அமைச்சர் சிறிசேன கூரே ராஜினாமாச் செய்ததைத் தொடர்ந்து, சென்ற மூன்றாம் திகதி நடைபெறவிருந்த ஐ. தே. க. செயற்குழுக்கூட்டம் நடத்தப்படவில்லை என்பது தெரிந்ததே.

## லலித் முன்னணியை அரசியல் கட்சியாக பதிய முயற்சி!

கொழும்பு, மே 16

திருமதி சிறிமானி அத்துலத்முதலியின் தலைமையிலான லலித் முன்னணியை ஓர் அரசியல் கட்சியாக தேர்தல் திணைக்களத்தில் பதிவுசெய்யும் முயற்சியில் அம்முன்னணியின் தலைவர்கள் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

முன்னணியின் உயர் தலைவர்கள் சிலர் இப்பொழுது தனிப்பட்ட விஜயங்களை மேற்கொண்டு வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர். அவர்கள் அடுத்த வாரம் கொழும்பு திரும்பியதும் அரசியலில் எதிர்கால உத்திகள் அடங்கிய திட்டம் ஒன்றை லலித் முன்னணி தயாரிக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது;

எதிர்வரும் தேர்தல்களில் ஐக்கிய தேசியக் கட்சியைத் தோற்கடிக்கும் முயற்சியில் லலித் முன்னணி தீவிரமாகச் செயற்படும் என்றும்—

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியினுடனான தொடர்பை லலித் முன்னணி தொடர்ந்து பேணும் என்றும்— தெரிவிக்கப்படுகிறது. (த-எ)

## புலிகளின் குரல் வானொலியில்

**16 - 05 - 1994**
**திங்கள் இரவு**

★ 8-01 — தளிர்கள்— சிறுவர்களுக்கான நிகழ்ச்சி
★ 8-20 — செய்திச்சரம்
8-30 — செய்திகள்
★ 8-40 — தரிசனம் — இசையமைப்பாளர் கண்ணன் அவர்களுடனான செவ்வி.

**17 - 05 - 1994**
**செவ்வாய் காலை**

★ 7-02 மாவீரவணக்கம்
★ 7-15 — இன்றைய தாரகை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — தாயகப் பாடல்கள்.

(த)

## இன்று

பாடசாலை மாணவர்களிடையே தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் நடத்தப்படும் மர நடுகைப் போட்டித் திட்டத்தின் ஓராண்டு நிறைவு விழாவும் பரிசளிப்பு விழாவும் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறும். (க-117)

★ ★ ★

தென்மராட்சி கல்விக் கோட்ட பாடசாலைகளில் சுகாதார வார விழா இன்று திங்கள் முதல் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறும்.

சுகாதார வாரத்தில் மாணவர்களுக்கு சுகாதாரம் பேணுதல் பற்றிய கருத்துரைகள் சுகாதாரப் பகுதியினரால் சகல பாடசாலைகளிலும் வழங்கப்படும். (த-117-11)

★ ★ ★

பொலிகண்டி கந்தவன ஆலயத்தில் புராணப் படிப்பு படித்து வரும் புராணிகர் ஐவர் இன்று நடைபெறும் வைபவம் ஒன்றில் ஆலய தர்மகர்த்தா சபையினரால் கௌரவிக்கப்படவுள்ளனர்.

கடந்த பங்குனி உத்தரதினத்தன்று கந்தபுராண படிப்பு ஆரம்பமாகியது. இன்று புராணப்படிப்பு நிறைவடைகிறது. (த-173)

★ ★ ★

தீவக உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட கழகங்களிடையே விளையாட்டுப் போட்டி ஒன்றை நடத்துவது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று திங்கள் முற்பகல் 10 மணிக்கு சுபாஸ் விடுதியில் இயங்கும் தீவக உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெறவுள்ளது.

தீவகத்தில் இருந்து இடம்பெயர்ந்து முகாம்களில் இயங்கும் விளையாட்டுக் கழகங்கள் மற்றும் ஏனைய கழகங்களைச் சார்ந்தோர் அதில் கலந்து கொள்ள அழைக்கப்பட்டுள்ளனர். (இ-5

### பாடசாலைகளில்

வேலணை சேர். வைத்திலிங்கம் துரைசுவாமி மத்திய மகாவித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று திங்கள் பிற்பகல் 2-30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். (த)

★ ★ ★

ஊர்காவற்துறை சரவணை சின்னமடு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையின் சுகாதார வார விழா இன்று பிற்பகல் 2.00மணிக்கு கல்லூரி அதிபர் திரு.த. சந்திரபதாசன் தலைமையில் நடைபெறும். யாழ். கல்வி வலயம் I இன் கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (உ)

### அதிபர்கள் கூட்டம்

யாழ். நல்லூர் கோட்ட ஜி சி. ஈ. சா. த. (II, III) பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு பிரதேசக் கல்விப் பணிமனையில் நடைபெறும். (க)

### பாஸ்கரலிங்கம் பதவி பறிபோகும்

திரு. ஆர். பாஸ்கரலிங்கத்துக்கு பதிலாக நிதி அமைச்சுக்கு புதிய செயலாளர் ஒருவர் நியமிக்கப்படவிருக்கிறார்

அடுத்த வாரத்தில் இந்த நியமனம் இடம்பெறவிருப்பதாக அரச வட்டாரங்களை மேற்கோள் காட்டி லங்காதீப நேற்று செய்தி வெளியிட்டது

திரு. பாஸ்கரலிங்கம் தற்சமயம் வெளிநாட்டில் வைத்திய சிகிச்சை பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-எ-6)

## பிரதேச செயலகங்களில் வேலை வாய்ப்புப் பிரிவுகள்

### வடக்கு -கிழக்கிலும் இயங்கும்

கொழும்பு, மே 16

பிரதேச வேலை வாய்ப்பு தரவு பிரிவுகள் பிரதேச செயலர் பிரிவுகள் தோறும் அடுத்த மாதம் முதல் செயற்பட விருக்கின்றன.

அரசாங்கம் இந்த முடிவை எடுத்துள்ளது

இந்தப் பிரிவுகள் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள பிரதேச செயலர் மற்றும் உதவி அரச அதிபர் அலுவலகத்திலும் அமைக்கப்படவிருக்கின்றன.

உள்ளூர் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பை வழங்க இந்தப் பிரிவு உதவும் என தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## விவசாயிகளின் பிள்ளைகளுக்கு தனியான புலமைப்பரிசில் திட்டம்

மகாபொல புலமைப் பரிசில் அல்லது வேறெந்த புலமைப் பரிசிலையும் பெறாத விவசாயிகளின் பிள்ளைகளுக்கு என தனியான புலமைப் பரிசில் திட்டம் ஒன்றை கொண்டு வர அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இத்திட்டத்தை அமுல் செய்வதில் முக்கிய பங்கு வகிக்கும் படி விவசாய அமைப்புக்கள் கோரப்படவுள்ளன. இதற்கென நிதியமொன்றை நிறுவ விவசாய ஸ்தாபனங்களுக்கு தலா 5 லட்சம் ரூபா வழங்கப்படும். விவசாய குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளின் நன்மைக்காக இந்தநிதியத்தின் பணம் பயன்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## தேசிய உற்பத்தியில் 5வீதம் வடக்கு - கிழக்கு யுத்தத்துக்கு

கொழும்பு, மே 16

''மொத்த தேசிய உற்பத்தியின் நூற்றுக்கு 5வீதம் வடக்கு-கிழக்கு யுத்தத்துக்கு செலவிடப்படுகிறது''.

நாடாளுமன்ற விவகார, சுற்றாடல்துறை அமைச்சரும், கொள்கை, திட்டமிடல் அமுலாக்கல் இராஜாங்க அமைச்சருமான விமல் விக்கிரமசிங்க இரத்தினபுரியில் நடந்த வைபவம் ஒன்றில் பேசுகையில் இத்தகவலை வெளியிட்டார்.

கல்வித்துறைக்கு மொத்த தேசிய உற்பத்தியில் நூற்றுக்கு 2.8 வீதம் செலவிடப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

1993ஆம் ஆண்டு நாட்டில் உள்ள 10 ஆயிரத்து 706 பாடசாலைகளில் 43 லட்சம் பேர் கல்வி கற்று வந்தனர். ஒரு லட்சத்து 94 ஆயிரத்து 39 ஆசிரியர்கள் உள்ளனர். மாணவர் ஆசிரியர் சராசரி 32 ஆகும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். (த-3)

## விடுதலைப் புலிகளின் செயற்பாடு நாடு முழுவதும் இடம்பெறுகிறது

### அமெரிக்க ராஜாங்க அமைச்சு அறிக்கை

வாஷிங்டன், மே 16

அமெரிக்க ராஜாங்க அமைச்சு ''1993 இல் உலக தீவிரவாதம்''- என்ற தலைப்பில் வருடாந்த அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறது.

கடந்த திங்கட்கிழமை இந்த அறிக்கை வெளியானது.

''இலங்கையின் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் பெரும்பாலான பிரதேசம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது. ஆனால் அதன் நடவடிக்கைகள் தீவு முழுவதும் இடம்பெறுகின்றன''— என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் உள்ள மிகவும் வலிமை வாய்ந்த தமிழ் அமைப்பாக விடுதலைப் புலிகள் இயக்கம் உள்ளது என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுதந்திர தமிழ்நாடு ஒன்றை அமைக்கும் தமது இலட்சியத்தை நிறைவேற்றுவதற்கான பிரசாரத்தை மேற்கொள்வதற்கும் போராட்டத்தை நடத்துவதற்கும் தேவையான ஆயுதங்களைப் பெறுவதற்கும் விடுதலைப் புலிகள் இயக்கம் பகிரங்கமாகச் செயற்பட்டு வருகிறது என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது;

விடுதலைப் புலிகள் போர்க்கள தீவிரவாத தந்திரோபாயத்துடன் பயங்கரவாதத் திட்டத்தையும் ஒருங்கிணைத்துச் செயற்படுத்தி வருவதாகவும் —

அதன் இலக்காக நாட்டின் சிரேஷ்ட அரசியல் தலைவர்களும் இராணுவத் தலைவர்களும் இருப்பதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு சர்வதேச ஆதரவு கட்டமைப்பு இருப்பதாகவும் அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (த-எ)

## தம்மிகாவை கைது செய்ய 6 விசேட பொலீஸ் குழுக்கள்

கொழும்பு, மே 16

பாதாள உலகத்தை சேர்ந்த இன்னொரு கோஷ்டியின் தலைவரான தம்மிகாவைக் கைது செய்வதற்கு ஆறு விசேட பொலீஸ் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பிரதிப் பொலீஸ் மா அதிபர் ஏ. எஸ். செனவிரத்தினாவின் உத்தரவின் மீது இக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இதே வேளை கைதான சொத்தி உபாலியை விசாரிக்க வேண்டியிருப்பதாக நீர்கொழும்பு, மிரிஹான, பொரளை, பாதுக்க பொலீஸ் நிலையங்கள் பம்பலப்பிட்டிப் பொலீஸ் நிலையத்துக்கு தெரிவித்துள்ளன;

## பம்பலப்பிட்டி அகதி முகாம் 27ஆம் திகதி மூடப்படும்

கொழும்பு, மே 16

பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் இயங்கிவரும் அகதிமுகாம் இம்மாதம் 27ஆம் திகதியுடன் மூடப்படும் என்று கொழும்பு பத்திரிகைச்செய்தி ஒன்று தெரிவித்தது.

இம்முகாமில் வசிக்கும் மட்டக்களப்பு மாவட்ட அகதிகள் மீளக்குடியமர்வதற்காக தமது சொந்த இடங்களுக்கு அனுப்பப்படுவர்.

மண்முனை வடக்கு, களுவாஞ்சிகுடி, வாழைச்சேனை வாகரை ஆகிய பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த 30 குடும்பங்கள் மட்டக்களப்புக்கு அனுப்பப்படும்

இக்குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் முதலில் மாற்று முகாம் ஒன்றில் தங்கவைக்கப்பட்டு பின்னர் சொந்த இடங்களுக்கு அனுப்பப்படுவர்.

## மாதத்தில் 28 நாட்களும் சிப்பாய்கள் பங்கருக்குள்!

### மத்திய மாகாண ஆளுநர் கூறுகிறார்

கொழும்பு, மே 16

தென்பகுதியில் நாம் வாரத்தில் ஆறு தினங்களும் கிரிக்கெட் விளையாடுகின்றோம். ஆனால் வடபகுதியில் தாய் நாட்டுக்காக சிங்கள இளைஞர்கள் மாதத்தில் 28 நாட்களும் பங்கர்களுக்குள் முடங்கியிருக்கிறார்கள்.

மத்திய மாகாண ஆளுநர் பி. சி. இம்புலான யுத்தத்தில் இறந்த படையினரை நினைவு கூரும் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையில் முன்கண்டவாறு குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில் கண்ணிவெடித் தாக்குதலில் உயிரிழந்த லெப். ஜெனரல் கொப்பேகடுவவின் மனைவி லலி கொப்பேகடுவவும் கலந்து கொண்டார்.

''நாம் அனுபவ [illegible] பெற்ற உண்மையைப் பேசு கின்றோம். ஆனால் அரசியலுக்குப் புதிதாக வந்தவர்களுக்கு எது சரி எது பிழை என்பது தெரியவில்லை.

''செல்வந்த குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர்கள் யுத்த முனையில் இறப்பதில்லை. கிராமத்து ஏழைகளின் குழந்தைகள்தான் யுத்த முனையில் [illegible]'' என்றும் அவர் கூறினார்.

## கிழக்கு பதவி வெற்றிடங்கள்; 3மாதத்தில் நிரப்பப் பணிப்பு

கொழும்பு, மே 16

கிழக்கு மாகாணத்தில் உள்ள அமைச்சுகள், திணைக்களங்கள் ஆகியவற்றில் நிலவும் பதவி வெற்றிடங்களை மூன்று மாதங்களுள் நிரப்பும்படி பொது நிர்வாக அமைச்சு சம்பந்தப்பட்ட அதிகாரிகளைப் பணித்துள்ளார்.

வெற்றிடங்களை நிரப்பும் போது போட்டிப் பரீட்சையில் பெற்ற புள்ளிகளின் குறைந்த மட்டத்தை பரீட்சை ஆணையாளருடன் சம்பந்தப்பட்ட அதிகாரி பேசி முடிவெடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் —

நியமனம் வழங்கப்படும் போது மாகாண சிரேஷ்ட பொலீஸ் அதிகாரியிடம் பாதுகாப்பு அறிக்கையைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் பணிப்புரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ-162)

**மரமதனை அழிப்பதானால் மண் வளத்தை அழிக்கின்றீர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி நவிலல்

எனது இல்லத்தில் நடைபெற்ற மகளின் இறுதிக் கிரியைகளின் போது கலந்து கொண்டு எமக்கு ஆறுதலையும் அனுதாபங்களையும் மற்றும் உதவிகளையும் நேரிலும் தபால் மூலமும் தெரிவித்த நண்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும் குடும்ப சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

நா. குகன் (கிளி)
குடும்பம்.

குகன் ஸ்ரூடியோ,
பருத்தித்துறை.

[சி-8161]



## இறைவனில் இணைந்த 31ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணில்;
24-04-1949

விண்ணில்;
17-04-1994

### செல்வி மேரி வனிதா பாக்கியநாதர்

"இறைவனில் உறைவது ஒன்றே — உன்
மனநிறைவும் மகிழ்வும் ஆகட்டும்"

அன்னாரின் ஆன்ம சாந்திக்காக 17 – 05 – 1994 செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு வல்வெட்டித்துறை புனித செபஸ்தியார் ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்படும் இரங்கல் திருப்பலியில் பங்கு கொண்டு அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றுக்காகப் பிரார்த்திக்கும்படியும், அன்று எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசன விருந்தில் கலந்து கொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரது பிரிவால் துயருறும்
தாய், சகோதரர்,
மைத்துனிமார், மருமக்கள்.

"ஜெயவாசா"
கிழக்குத் தெரு,
வல்வெட்டித்துறை.

(30912)



## மரண அறிவித்தல்கள்

### திருமதி N. K. இராசசிங்கம் மதியாபரணம்

திருமதி N. K. இராசசிங்கம் மதியாபரணம் 15-05-94 ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராசசிங்கம் (முன்னாள் நாவலப்பிட்டி பிரபல வர்த்தகர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற குமாரசிங்கம், தவரஞ்சிதமணி, மனோரஞ்சிதமணி, குலசிங்கம் (அதிபர், ஊரெழு சி. சி. த. க. பாடசாலை) ஆகியோரின் அன்புத்தாயாரும், திரு அ. சிவகுருநாதன் (தினகரன், பிரதம ஆசிரியர்), திரு. மு தியாகராஜா (பொறியியலாளர் பிரேசில்), மனோன்மணி (ஆசிரியை, கோண்டாவில் சி. த. க. பாடசாலை) ஆகியோரின் மாமியாரும், திருமதி மாலதி திருக்கேதீஸ்வரன் (U. K.). கீதா, விஸ்ணுவர்த்தன், Dr T. நித்தன், லாவண்யா, செந்தூரன், பிரணவினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், மதுமிதா, நிர்த்தனா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்று 15-05-94இல் நடைபெற்றன.

தகவல்:
திரு இ. குலசிங்கம்.
(மகன்)
அதிபர், சி சி. த. க ஊரெழு

(30910)

### வண. சகோதரர் எஸ். வி. அலெக்சிஸ் S. S. J

புனித சூசையப்பர் துறவற சபையைச் சேர்ந்தவரும் கல்லடைப்பிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவருமான வண. சகோதரர் எஸ் வி அலெக்சிஸ் 13-5-94 அன்று கல்முனையில் காலமாகி விட்டார்.

இவருடைய நல்லடக்கம் இன்று (16-5-94) காலை 10.00 மணிக்கு கல்முனை திரு இருதய கோவில் மக்காலையில் இடம்பெறும்.

தகவல்:-
வண சகோ. எ கே பற்றிக் S S J
43, சோமசுந்தரம் லேன்,
யாழ்ப்பாணம்.

(30914)

### திருமதி மேரி ஜோசபின் (இராஜேஸ்வரி) மரியதாஸ்

தென்மூலை, அச்சுவேலியைச் சேர்ந்த திருமதி மேரி ஜோசபின் (இராஜேஸ்வரி மரியதாஸ் நேற்று (15 - 05 - 94) நண்பகல் காலமானார்.

இவர் திரு மரியாம்பிள்ளை மரியதாஸின் அன்பு மனைவியும், டக்ஸ்ரன் நிமால் பிரான்ஸ்) மேரி சல்பீசியா (பேபி), மேரி பிறேமினா (லிசா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற சந்தியோகு, இராசம்மாவின் நேசமகளும், காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை ஆசியம்மாவின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற மேரி அருள், பிரான்சிஸ் (பிரான்ஸ்), லூர்துமேரி (இத்தாலி ஆகியோரின் அருமைச் சகோதரியும், ஜோசப் தங்கம், ஞானம், இரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

இன்று (16 - 05 - 94) திங்கட்கிழமை காலை 10 மணியளவில் நல்லடக்க ஆராதனை நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தகவல்:
மரியாம்பிள்ளை மரியதாஸ்

தென்மூலை,
அச்சுவேலி.

(30913)


# ஓடும் ரயிலிலிருந்து குதித்து 6 குற்றவாளிகள் தப்பினர்

## றப்புக்கணை அருகே சம்பவம்

கொழும்பு, மே 16

நீர்கொழும்பு சிறையில் இருந்து போகம்பரை சிறைச்சாலைக்கு ரயிலில் கூட்டிச் செல்லப்படும்போது ஆறு முக்கிய குற்றவாளிகள் தப்பி ஓடி விட்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

றம்புக்கணை அருகில் வைத்து ஓடும் ரயிலில் இருந்து இக்கைதிகள் பாய்ந்து தப்பினர்.

தங்கள் கைகளுக்குப் போடப்பட்டிருந்த விலங்குகளை இரகசியமாகக் கழற்றிய பின்னரே அவர்கள் தப்பினர் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

சில மணித்தியாலங்களில் பொலீஸார் நடத்திய தேடுதலின்போது தப்பிய கைதிகளில் இருவர் றம்புக்கணைப் பொலீஸாரிலாலும், ஒருவர் மாவனல்லைப் பொலீஸாரினாலும் கைது செய்யப்பட்டனர் என்று அறிவிக்கப்பட்டது. (உ-எ)

## தனியார் கல்வி: வகுப்பு நேரத்தில் மாற்றம்

யாழ்ப்பாணம், மே 16

யாழ். கல்வி வலயம் I இல் இயங்கும் பாடசாலைகள் இன்றுமுதல் இருநேரப் பாடசாலைகளாக இயங்கவிருப்பதால், யாழ்., நல்லூர், தென்மராட்சி கல்விக் கோட்டங்களில் உள்ள தனியார்கல்வி நிறுவனங்களின் பிரத்தியேக வகுப்புக்களின் நேரம் இன்று முதல் மாற்றப்பட்டுள்ளது.

ஆண்டு 6 தொடக்கம் அதற்கு மேற்பட்ட மாலை நேர வகுப்புக்களை மாலை 4 மணி முதல் 6.30 மணி வரையும் —

ஆண்டு 5 அதற்கு உட்பட்ட வகுப்புக்களையும், 94 ஆம் ஆண்டு உயர்தர வகுப்புக்களையும் வழமைபோல மாலை 3 மணி முதல் 6. 30 மணி வரையும்— நடத்துமாறு யாழ். மாவட்ட தனியார் கல்வி நிறுவன ஒன்றியச் செயலாளர் கேட்டுள்ளார். (ஒ-3)

## யாழ். பல்கலை ஊழியர் கடமைக்கு செல்வர்

யாழ்ப்பாணம், மே 16

அனைத்துப் பல்கலைக்கழக தொழிற்சங்க சம்மேளனம் வேலைநிறுத்த அறிவித்தலை கைவிட்டதை அடுத்து —

யாழ். பல்கலைக்கழக ஊழியர்கள் வழமைபோல் எதிர்வரும் 20 ஆம் திகதி கடமைக்குச் சமுகமளிப்பார்கள் என்று ஊழியர் சங்கத் தலைவர் திரு. ச.க. தவேந்திரன் அறிவித்துள்ளார்.

வேலை நிறுத்தம் கைவிடப்பட்டு விட்டதால், ஊழியர்கள் அனைவரும் கடமைக்குச் சமுகம் தந்து, பல்கலைக்கழகம் இயங்க ஒத்துழைக்குமாறு அவர் கேட்டுள்ளார்.

இதேவேளை, யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் ஏற்கனவே ஒழுங்கு செய்திருந்த கூட்டங்கள் அனைத்தும் ரத்துச் செய்யப்படுகின்றன என்றும் —

அனைத்து செயற்குழு அங்கத்தவர்களையும் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு ஊழியர் பொது அறையில் அவசரமாகக் கூடுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## விளையாட்டு நிகழ்வுகள்

பி விபுலானந்தன் கிண்ணத்துக்காக யாழ். சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் யாழ் பல்கலைக்கழக ஆடுகளத்தில் நடத்தி வரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ 3.30 மணி:- ஜொனியன்ஸ் சிவப்பு அணி எதிர் சென்றலைட்ஸ் நீல அணி

★ 4-30 மணி: பல்கலைக்கழக 'ஏ' அணி எதிர் சென்றலைட்ஸ் சொக்ஸ் அணி. (உ)

## கஞ்சாவுடன் பிடிபட்ட 3 ராணுவ சிப்பாய்கள்!

கொழும்பு, மே 16

தனபன் வில என்ற இடத்திலிருந்து 340 கிராம் கஞ்சாவை கொண்டு வந்த — இராணுவத்தினர் என்று சந்தேகிக்கப்படும் — மூவரை தெவட்ட என்ற இடத்தில் வைத்து காலிதுறைமுக பொலீஸார் கைது செய்தனர்.

இவர்களிடம் இருந்து முறையே 130, 120, 90 கிராம் கஞ்சாவை பொலீஸார் கைப்பற்றினர்.

காலி நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட மூவரும் பின்னர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர். (ஒ-த)

## அன்பளிப்புகளை வழங்கி படையினருக்கு உற்சாகம்

யாழ்ப்பாணம், மே 16

வடபகுதி முகாம்களில் உள்ள படையினரை மனோரீதியாக உற்சாகப்படுத்தும் நடவடிக்கைகளில் படை உயர் அதிகாரிகளும், அரசியல் தலைவர்களும் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றனர்.

பூநகரி பகுதியில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினருக்கு பெருமளவான அன்பளிப்பு பொருள்கள் நேற்று வழங்கப்பட்டன.

பொது மக்களிடம் இருந்தும் பொது அமைப்புகளிடமிருந்தும் பெருந்தொகையாகச் சேர்க்கப்பட்ட அன்பளிப்புப் பொருள்கள் இதுபோன்று படையினருக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

மீண்டும் ஒரு இராணுவ நடவடிக்கையை வடகுதி மீது மேற்கொள்ளத் தேவையான உற்சாகம் படையினரிடையே வெகுவாகக் குறைந்துள்ள நிலையில் இந்த உற்சாகமூட்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக இராணுவ உயர் வட்டாரங்கள் தெரிவித்தன. [இ-5]

## உபாலியின் பாதுகாப்புக்கு ஊழல் புரியும் அதிகாரிகள்

### பொலீஸார் மத்தியில் அதிருப்தி

கொழும்பு, மே 16

கைதாகியுள்ள சொத்தி உபாலியின் பாதுகாப்புக்கு ஊழலுக்கு பேர்போன அதிகாரிகள் பொறுப்பாக இருப்பதும் பொலீஸார் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிவிக்கப் படுகிறது.

சொத்தி உபாலி தொடர்பான விசாரணைகளை நடத்தும் பொலீஸ் அதிகாரிகள் பாதாள உலகத்தைச் சேர்ந்த போதைப் பொருள் கள்ளச் சாரயம் ஆகியவற்றை விற்கும் நபர்களிடம் இருந்து லஞ்சம் பெற்று வந்தவர்கள் என்றும்—

இது சந்தேக நபர்களை இலகுவில் விடுவிப்பதற்கு செய்யப் பட்ட சதி என்றும் சொல்லப்படுகிறது.(த-எ-6)

### தலைக் ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பதாக அறிகிறேன். ஆனால் அவர் அதில் என்ன தெரிவித்திருக்கிறார் என்பது எனக்குத் தெரியாது ஆனால் அரசு இக்கோரிக்கையை மிகச் சாதகமாகப் பரிசீலிக்கிறது.

கேள்வி:- ஏற்கனவே இச்சம்பவம் குறித்து விசாரித்த பொலிஸ் குழு, இக்கொலைக்கு புலிகளே காரணம் எனத் தெரிவித்துள்ளது. ஆணைக்குழு விசாரணையால் புதிதாக எதுவும் வெளிவருமா? அப்படி எதும் இருப்பதாகக் கருதுகிறீர்களா?

விஜேசேகர :- எனக்குத் தெரியாது. புதிய விடயங்கள் ஏதும் வெளிவரும் என பிரேமதாசா குடும்பத்தினர் எதிர்பார்க்கக்கூடும்.

— இவ்வாறு விஜேசேகரா தெரிவித்தார்.

'ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவு தருவதற்கு ஒரு நிபந்தனையாக தமது குடும்பத் தலைவரின் கொலை குறித்து விசாரிக்க ஆணைக்குழு ஒன்றை நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கையை பிரேமதாச குடும்பத்தினர் முன்வைத்துள்ளனர்'' — என்று கொழும்பில் செய்தியாளர் ஒருவர் ... (உ-3)

### தலை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரிகளின் பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழுவின் அனுமதி பெறும் நடைமுறையை ரத்துச் செய்ய வேண்டும் என்று யாழ். அரச அதிபர் திரு மாணிக்கவாசகர் வடக்கு – கிழக்கு புனர்வாழ்வு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வலியுறுத்தி இருந்தார்.

புனர்வாழ்வு அமைச்சகுடாநாட்டிற்கு அனுப்புவதற்கு இணக்கம் தெரிவிக்கும் பொருள்களுக்கு படையினரின் அனுமதி பெற வேண்டி இருப்பதால் அவற்றைக் கொண்டு வந்து சேர்ப்பதில் காலதாமதம் உண்டாவதாக அரச அதிபர் சுட்டிக் காட்டியிருந்தார்.

திட்டப் பணிப்பாளர் திரு. செ. பத்மநாதனும் கொழும்பு சென்றிருந்த சமயம் இது குறித்து பாதுகாப்பு மற்றும் புனர்வாழ்வுத் துறைகளைச் சேர்ந்த உயர் அதிகாரிகளிடம் இது குறித்து வலியுறுத்தி இருந்தார்.

தடை செய்யப்படாத பொருள்களை படையினரின் அனுமதி இன்றியே எடுத்து வருவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டிருப்பதாக கொழும்பிலிருந்து திட்டப் பணிப்பாளர் தமக்குத் தகவல் அனுப்பி இருப்பதாக அரச அதிபர் நேற்றுத் தெரிவித்தார்.

இதேவேளை—

வவுனியா மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளைச் சேர்ந்தவர்கள், குறிப்பாக மாணவர்கள் தாண்டிக்குளம் ஊடாகச் சைக்கிள்களை எடுத்து வருவதற்கு அனுமதி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும்—

வடக்கு – கிழக்கு மாகாண புனர்வாழ்வு, புனரமைப்பு, பாதுகாப்பு, கல்வி, சுகாதாரம் தொடர்பான ஒருங்கிணைப்பு உயர் மட்டக் குழுவின் மே மாதக் கூட்டத்தில் ...

## ஏப்ரல் மாத பொதுசன உதவிப் பணம்

யாழ்ப்பாணம், மே 16

புங்குடுதீவு வேலணை, நயினாதீவு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்கள் ஏப்ரல் மாதத்துக்கான கொடுப்பனவுகளை யாழ் மத்திய தபாலகத்தில் தற்காலிகமாக இயங்கும் வேலணை புங்குடுதீவு தபாலகங்களில் பெற்றுக் கொள்ளலாம் என்றும்—

கெற்பெலி அகதிமுகாமில் உசிக்கும் மேற்படி பிரதேசங்களைச்சேர்ந்தவர்கள் விடத்தல்பளை உபதபாலகத்தில் தமது கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும்

புற்றுநோய் தொழுநோய் கசரோகம் ஆகியவற்றுக்கான ஏப்ரல் மாத உதவிக் கொடுப்பனவுகளை புங்குடுதீவு, வேலணை விடத்தல்பளை தபாலகங்களில் பெற்றுக் பெற்றுக்கொள்ளலாம் என்றும் வேலணை பிரதேசசெயலர் அறிவித்துள்ளார். (த)

## கான்ஸ்டபிள் நீரில் மூழ்கி மரணம்

மட்டக்களப்பு, மே 16

களுவாஞ்சிக்குடி பொலீஸ் நிலையத்தில் கடமையாற்றிய பொலீஸ் கான்ஸ்டபிள் சுனில் சாந்த (வயது 26) மட்டக்களப்பு வாவியில் நீரில் மூழ்கி மரணமானார்.

களுவாஞ்சிக்குடியில் உள்ள பட்டிருப்புப்பாலத்தில் அமைந்துள்ள காவல் நிலையத்தில் சம்பவம் நடந்த இரவு அவர் கடமையாற்றினார் என்றும்—

மறுநாள் காலை முகம் கழுவ மட்டக்களப்பு வாவிக்குச் சென்ற போது நீரில் மூழ்கி மரணமானார் என்றும் களுவாஞ்சிக்குடி பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரியினால் தெரிவிக்கப்பட்டது. (த)

### லலித்......

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமது கணவரின் கொலை குறித்து விசாரிக்க ஆணைக்குழு நியமிக்கும்படி அவர் கோருகிறார்.

ஆகவே இந்த இரண்டு கோரிக்கைகளும் ஒன்றாகவே பரிசீலிக்கப்பட வேண்டும் என நான் கருதுகிறேன். — என ... [உ-3]

# மண்டூரில் தமிழ் இளைஞர் கைதாகி சித்திரவதை!

யாழ்ப்பாணம், மே: 16

மண்டூரில் தையல் தொழில் செய்யும் ஒரு தமிழரை கடந்த 3 ஆம் திகதி ஸ்ரீலங்கா பொலிஸ் அதிரடிப்படையினர் கைது செய்து சித்திரவதைக்குள்ளாக்கியுள்ளனர்.

மண்டூர் 35 ஆம் கிராமத்தைச் சேர்ந்த 19 வயதான கிருபராஜா உதயகுமார் என்ற தமிழ் இளைஞரே இவ்வாறு சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு மண்டூர் முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

## லஞ்ச வழக்கை வாபஸ் பெற நீதிமன்றம் அனுமதி மறுப்பு

கொழும்பு, மே 16

இலங்கை மரக்கூட்டுத்தாபனத் தலைவர் பீற்றர் பெரேராவுக்கு எதிராக லஞ்ச ஆணையாளர் தொடர்ந்துள்ள வழக்கை வாபஸ் பெறுவதற்கு கொழும்பு பிரதம நீதிவான் சரத் அம்பேபிற்றிய அனுமதி அளிக்க மறுத்துவிட்டார்.

தமது சொத்துகள் பற்றி பொய்யான தகவல்கள் அடங்கிய பிரகடனத்தை சமர்ப்பித்ததாகதிரு. பீற்றர் பெரேரா மீது லஞ்ச ஆணையாளர் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

லஞ்ச ஆணையாளரின் பணிப்பின் மீது உதவி லஞ்ச ஆணையாளர் வி. ஹெட்டியாராச்சி நீதிமன்றத்தில் ஆஜராகி வழக்கை வாபஸ் வாங்குவதாக அறிவித்தார்.

வழக்கை வாபஸ் வாங்குவதாக லஞ்ச ஆணையாளர் நோயல் விஜேநாயக்கா தமது கையெழுத்திட்ட அறிக்கையை சமர்ப்பிக்காதவரை வழக்கை வாபஸ் வாங்க அனுமதிக்கப் போவதில்லை என்று பிரதம நீதிவான் தெரிவித்தார். (உ-எ)

## சுங்க தீர்வையற்ற வர்த்தக நிலையம்

கொழும்பு, மே 16

சுங்கத் தீர்வையற்ற வர்த்தக நிலையம் ஒன்று திருகோணமலை சங்கத்திணைக்களத்தின் இறங்குதுறைக் கட்டடத்தில் நிறுவப்படவுள்ளது.

இலங்கைத் துறைமுக சேவைகள் நிறுவனம் இதனை நடத்தவுள்ளது.

இவ்வர்த்தக நிலையத்துக்கான மூன்று மாடிக் கட்டடம் ஒன்றை நிறுவும் வேலையை திருமலை துறைமுக அதிகார சபை ஆரம்பித்துள்ளது. 9லட்சம் ரூபா செலவில் இக்கட்டடம் அமைக்கப்படுகிறது. (த-எ)

## கதிர்காம உற்சவம் ஜூலை 9இல்

கதிர்காமம் ஆடித் திருவிழா எதிர்வரும் ஜூலை மாதம் ஒன்பதாம் திகதி ஆரம்பமாகிறது. 23ஆம் திகதி காலை 9மணிக்கு தீர்த்தோற்சவம் நடைபெறும். (இ-எ)

## மிதிவெடியில் சிக்கினார்

யாழ்ப்பாணம், மே 16

அளவெட்டி வடக்குப் பகுதியில் நேற்று வீடு பார்க்கச் சென்ற ஒருவர் இராணுவத்தினரி மிதிவெடியில் சிக்கி காலை இழந்துள்ளார்.

அளவெட்டியைச் சேர்ந்த வி. கருணாகரன் (29 வயது) என்பவரே காலை இழந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுகிறார். (ஒ-3)

## ஜயமஹ ராணுவ நடவடிக்கை பூர்த்தியாம்

கொழும்பு, மே 16

வவுனியா மாவட்டத்தில் ஆயுதபடையினர் மேற்கொண்ட ஜயமஹ ராணுவ நடவடிக்கை நேற்றுமுன்தினம் முடிவடைந்ததாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்தது.

வவுனியாவுக்கு வடக்கே, தமது கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்தை மேலும் விஸ்தரித்துள்ளதாகவும் படையினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (இ-எ-162)

### ரூ. 1 கோடி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொறுப்பதிகாரி உபாலி சேனரத்ன, பொலீஸ் மா அதிபர் சட்டமா அதிபர் ஆகியோர் இம்மனுவில்பிரதிவாதிகளாகக் காட்டப்பட்டுள்ளனர்.

கடந்த மார்ச் மாதம் நடந்த தென்மாகாணசபைம் தேர்தலின்போது, காரணம் இன்றி பொலீஸார் மனுதாரர்கள் இருவரையும் தாக்கிக் காயப்படுத்தியதாகவும் அவர்களின் அடிப்படை உரிமைகளை மீறியதாகவும் மனுவில் கூறப்பட்டுள்ளது. (த-எ)


## யாழ். ஸ்ரீதரில்.........

விடுதலைப்புலிகள்
கலை, பண்பாட்டுக் கழகமும்
நிதர்சனமும்
இணைந்து வழங்கும்

# மண்ணுக்காக....

நடிகர்கள்
தேவர் அண்ணா கணேஸ், கலையரசன்
அமரசிங்கம், பிரியா, பூரணா

மழலைத் தாரகைகள்
சி. சிவரஞ்சனி, சி. சிவநிரஞ்சனா
மற்றும் பலர்

மூலக்கதை — வல்வையூரான்
இசை — முரளி

பாடல், படக்கதை, உரையாடல், நெறியாள்கை
பொன் கணேசமூர்த்தி

தினசரி மாலை 3 மணி, 6 மணி
சனி, ஞாயிறு காலை 10-30 மணி
மாலை 3 மணி, 6 மணி

(சி/8160)



## கண்ணீர் அஞ்சலி

கோண்டாவில் ஆசிமட அரசடி விநாயகர் ஆலய நம்பிக்கைப் பொறுப்பாளர் சபைப் பொருளாளர்

திரு. இ. குலசிங்கம்
(அதிபர் ஊரெழு சி சி. த. க. பாடசாலை)
அவர்களின் தாயார்

### திருமதி மதியாபரணம் இராசசிங்கம்

அவர்களது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக விநாயகப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

கோண்டாவில் ஆசிமட அரசடி
விநாயகர் ஆலய நம்பிக்கைப்
பொறுப்பாளர் சபையும்,
வழிபடுவோர் சங்கமும்;

[30911]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361/3 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 16 - 05 - 1994 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.